பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 08 | புதன்கிழமை | 25.10.2023 | அதிர்வு 85

## மக்களைத் தாக்கும் மூன்று நோய்கள்!

### சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மூன்று நோய்களின் பரவும் தன்மை அதிகரித்து வருகின்றது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நோய் நிலைமை 08▶

## பௌத்த மாவட்டமாக மாறுகின்றது திருமலை; துரிதகதியில் இடம்பெறுகின்றது ஆக்கிரமிப்பு

### மக்கள் சந்திப்பின் பின்னர் சுமந்திரன் எம்.பி. விசனம்



(அப்துல்சலாம் யாசீம்)

"திருகோணமலை மாவட்டத்தை பௌத்த மாவட்டமாக மாற்றுகின்ற நீண்ட காலத் திட்டம் இப்போது துரிதகதியில் இடம்பெற்று வருகின்றது."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் விசனம் 08▶

# 'மொட்டு' ஆதரவை விலக்கினால் உடனே நாடாளுமன்றத் தேர்தல்!

## இதுவே ரணிலின் இறுதி நிலைப்பாடு



**கொழும்பு, ஒக். 25**

இந்த அரசைத் தொடர்ந்து கொண்டு செல்ல ஜனாதிபதிக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிக்காவிட்டால் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளார் என்று அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. 06▶

## அரசைக் கவிழ்க்க 'மொட்டு' முயன்றால் ஆதரவளியேன்

### எஸ்.பி. பகிரங்க அறிவிப்பு



"ஜனாதிபதிக்கான ஆதரவை வாபஸ் பெற்று இந்த அரசைக் கவிழ்க்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முயன்றால் அதற்கு நான் ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டேன்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டால் இந்த அரசைக் 06▶

## தாதியர் ஓய்வு; தீர்மானம் ரத்து



அரச தாதியர் சேவையில் தரம் நான்கைச் சேர்ந்த தாதியர்கள் 60 வயதில் கட்டாயமாக ஓய்வுபெற வேண்டுமென எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை இரத்துச் 08▶

## முல்லைத்தீவில் காணாமல்போன இளம் குடும்பப் பெண் படுகொலை

### புதைக்கப்பட்டிருந்த நிலையில் சடலம் நேற்று தோண்டி எடுப்பு; கணவன் கைது



– சண்முகம் தவசீலன் –

முல்லைத்தீவு, நீராவிப்பிட்டி கிழக்கு கிராமத்தில் இளம் குடும்பப் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று சடலம் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் அவரின் கணவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீராவிப்பிட்டி கிழக்கு பகுதியில் 08▶




நேற்று தென்னிலங்கை ஊடகங்களில் மிகப் பரபரப்பாகப் பேசப்பட்ட விடயம் பயங்கரவாதத் தொடர்புடையவர்கள் என்று பட்டியலிடப்பட்டிருந்த – கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்த – இருவரின் பெயர்களை அவற்றிலிருந்து நீக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன வெளியிட்டிருந்த விவகாரம்தான். 06▶

# இலங்கை – இந்திய சர்வதேசக் கடல் எல்லையில் எட்டு இலங்கையர்கள் உட்பட பன்னிருவர் கைது

## ஐந்து படகுகளில் கடலட்டை, மஞ்சளுடன் சிக்கினர்






(மன்னார் நிருபர்)

இலங்கை – இந்திய சர்வதேசக்கடல் எல்லையில் கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட எட்டு இலங்கையர்கள் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து இந்திய நாணய மதிப்பில் 9 லட்சம் ரூபா கடத்தல் பொருள்கள் பறி முதல் செய்யப்பட்டுள்ளன. அவர்களின் ஐந்து படகுகளும் மடக்கப்பட்டுள்ளன.

ராமநாதபுரம் மாவட்ட சுங்கத்துறை அதிகாரிகளுக்கு இலங்கையிலிருந்து தங்கம் படகில் கடத்தி வரப்பட இருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சுங்கத்துறையினர் இந்தியக் கடலோரக் காவல் படையினருடன் இணைந்து இந்திய – இலங்கை சர்வதேசக் கடல் எல்லைப் பகுதியில் கடத்தல் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சர்வதேசக் கடல் எல்லையில் இருந்து 12 கடல் மைல் தூரத்தில் இந்தியக் கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்று கொண்டிருந்த இலங்கை புத்தளம் பகுதியை சேர்ந்த 4 மீன்பிடி படகுகளை அவர்கள் வழிமறித்தனர். அதிலிருந்த 8 இலங்கை நபர்களிடம் இந்தியக் கடலோரக் காவல் படையினர் விசாரித்தனர்.

விசாரணையில் அவர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பதில் அளித்தமையால் அவர்களைப் படகோடு மடக்கிக் கைது செய்த இந்தியக் கடலோர காவல் படையினர் மண்டபம் அழைத்து வந்து கொண்டிருந்த போது, நடுக்கடலில் மண்டபம் மரைக்காயர் பட்டணத்தைச் சேர்ந்த நாட்டு படகை பிடித்துச் சோதனை செய்தனர். அப்போது படகில் 35 மூடைகளில் 594 கிலோ சமையல் மஞ்சள் மற்றும் 300 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் இருந்தமை தெரியவந்தது. அதனையடுத்து அந்தப் படகையும் அதிலிருந்த நால்வர் என மொத்தமாக 12 பேரையும் கைது செய்து மண்டபம் தெற்கு மீன்பிடித் துறைமுகத்துக்கு அதிகாரிகள் அழைத்து வந்தனர்.

பின்னர் அவர்களிடம் நடத்திய விசாரணையில் கடல் அட்டைகள் மற்றும் சமையல் மஞ்சள் மூடைகளை புத்தளம் மற்றும் கல்பிட்டிக்குக் கடத்திச் செல்லவிருந்த போது தாம் பிடிபட்டனர் என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

தமிழகத்தில் இருந்து கடத்தி வரப்பட்ட கடத்தல் பொருள்களை பெற்று செல்வதற்காக 4 படகுகளில் இலங்கை நபர்கள் காத்திருந்தமையும் விசாரணையில் தெரியவந்தது.

தமிழகத்தைச் சேர்ந்த நால்வரும், கடத்தல் பொருள்களுடன் ராமநாதபுரம் சுங்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும் இலங்கை சேர்ந்த நான்கு படகையும் அதிலிருந்து எட்டு நபர்களையும் மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் அதிகாரிகள் ஒப்படைத்தனர்.

அந்த எட்டு நபர்கள் மீதும் சட்டவிரோதமாகக் கடவுச்சீட்டு இன்றி இந்தியாவுக்குள் நுழைந்தனர் என வழக்குப் பதிவு செய்து, ராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, புழல் சிறையில் அடைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரியவருகிறது.

இதுகுறித்து மரைன் காவல் கண்காணிப்பாளர் ஹரி கிரண் பிரசாத் கூறியவை வருமாறு:–

கைது செய்யப்பட்ட 08 இலங்கையர்களிடமும் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் இருந்து கடத்தி வரப்பட்ட கடல் அட்டைகள் மற்றும் மஞ்சள் மூடைகளை பெறுவதற்காக நடுக்கடலில் காத்திருந்தார்களா? அல்லது வேறு சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக இந்தியக் கடற்பரப்பிற்குள் நுழைந்தார்களா? – என விசாரணை நடைபெற்று அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது அவர்கள் மீது கடவுச்சீட்டு இன்றி இந்தியாவுக்குள் அத்துமீறி நுழைந்தனர் என வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தனுஷ்கோடி கடல் வழியாக நடைபெற்று வரும் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# முறிகண்டிப் பிள்ளையார் ஆலய வழக்கு 12 வருடங்களுக்குப் பின்னர் தள்ளுபடி

பன்னிரண்டு வருடங்களாக இடம்பெற்ற திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலய உரிமை தொடர்பான வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதும் பராமரிப்புக்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது இந்த ஆலயம் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது.

கோவில் வருமானத்தில் ஒரு பகுதி வன்னிப்பிராந்தியத்தில் இந்து சமய வளர்ச்சிக்காக இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மூலம் செலவிடப்படுகிறது.

திருமுறிகண்டிப் பிள்ளையார் கோவிலின் பரம்பரை அறங்காவலர் என்று கூறிக்கொள்ளும் ஒருவர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகித்து வரும் இந்த ஆலயத்தைத் தன்னிடம் மீள ஒப்படைக்குமாறு நீதிமன்றத்திற்கு உத்தரவிடக் கோரி 2011 ஆம் ஆண்டு அடிப்படை உரிமை மனு



தாக்கல் செய்தார்.

நீண்ட காலமாக இடம்பெற்ற இவ் வழக்கு நேற்றையதினம் மூவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்களால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆலயம் அமைந்துள்ள ஆலயக் காணி அரச காணி என்பதால் தனி நபர் ஒருவர் ஆலயத்திற்கு உரிமை கொண்டாட முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இவ்வழக்கு இடம்பெற்று வந்ததால் அந்தப் பிரதேசத்தில் அடிப்படை சுகாதார வசதிகள், உட்கட்டுமானப் பணிகள் மற்றும் பிரதேசத்தை அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்வதற்கு தடை ஏற்பட்டது.

இவ்விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் உமாமகேஸ்வரன், ஆலய உரிமை தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் இப்பகுதியை துரிதமாக அபிவிருத்தி செய்யும் பல்வேறு திட்டங்கள் செற்படுத்தப்படும் என்றார்.

## மீன் பிடிப் படகில் ஐவருடன் சிக்கிய

# 450 கோடி ரூபா பெறுமதி ஹெரோயின் காலிக் கரைக்குக் கொண்டுவரப்பட்டது







காலி கடற்பரப்பில் நீண்ட நாள் மீன் பிடி படகிலிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் நேற்றுக் கரைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

219 கிலோகிராமிற்கும் அதிக தொகை ஹெரோயின் போதைப்பொருள் படகிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 450 கோடி ரூபாவிற்கும் அதிகம் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கைக் கடற்படையின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், கடற்படையின் விஜயபாகு கப்பலைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போதே ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

குடாவெல்ல, திஸ்ஸமஹாராம, கொட்டகொட மற்றும் மாமடல ஆகிய பகுதிகளை சேர்ந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
















# போதைப்பொருள்களின் கடத்தலைத் தடுக்க போதைப்பொருள் தடுப்பு கட்டளை நிறுவனம்

## சட்டம் தயாராகின்றது என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் தெரிவிப்பு

**வெளிநாடுகளிலிருந்து போதைப்பொருள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதைத் தடுப்பதற்கான போதைப்பொருள் தடுப்பு கட்டளை நிறுவனமொன்று (Anti-Narcotic Command) ஸ்தாபிக்கப்படுமென தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.**

**அதனூடாக முப்படையினர் மற்றும் அரச புலனாய்வு பிரிவை இணைத்துச் சுற்றிவளைப்புகளுக்கு அவசியமான திட்டங்களை வகுப்பதற்கான இயலுமை கிட்டும் என்றும் அவர் தெரிவித்தார்.**



அண்மையில் மீட்கப்பட்ட 450 கோடி ரூபா பெறுமதியான 217 கிலோ ஹெரோயின் போதைப்பொருளை கொழும்பு துறைமுகத்தில் நேற்று மேற்பார்வை செய்ததன் பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையினர் மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் இணைந்து மேற்கொண்ட முன்னெடுப்பின் ஊடாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இலங்கையின் கடற்கரை பாதுகாப்பு கப்பல்களைப் பயன்படுத்தி காலியின் மேற்குப் பகுதியில் 91 கடல் மைல் (168 கி.மீ) தொலைவில் ஆழ்கடல் பரப்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி போதைப்பொருள் கட்டளை நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கான சட்ட மூலம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்வரும் நாட்களில் அதனை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கவுள்ளதாகவும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நாட்டிற்குள் கொண்டுவரப்படும் போதைப்பொருட்களில் 65 வீதத்தை மட்டுமே தடுக்க முடிவதாகவும், ஏனைய 35 வீதப்போதைப்பொருள்கள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுகின்றன எனவும் சுட்டிக்காட்டிய சாகல ரத்நாயக்க, போதைப்பொருள் கொண்டுவரப்படுவதை முற்றாகத் தடுப்பதற்கான கடல்சார் வேலைத்திட்டம் ஒன்றின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த சாகல ரத்நாயக்க, 200 கிலோ கிராம் அளவான பாரிய தொகை ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளமைக்கு கடற்படை தளபதி உள்ளிட் படையினருக்கும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தினருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

கடந்த நாட்களில் இவ்வாறான பாரிய தொகையான போதைப்பொருள் இரண்டாவது தடவையாக மீட்கப்பட்டுள்ளது. முதல் தடவையும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தின் தகவலுக்கமையவே சுற்றிவளைப்புச் செய்யப்பட்டது.

அரச புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலுக்கமைய கடற்படையினரால் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. போதைப்பொருள் வலையமைப்புக்கள் உலக அளவில் வியாபித்துள்ளன. அதிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்கான பல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

கடற்படை, பொலிஸ் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து இலங்கை போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறான நடவடிக்கையின் மூலம் 65 சதவீத போதைப்பொருள் மாத்திரமே மீட்கப்படுவதோடு, ஏனைய 35 சதவீதமான போதைப்பொருள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுகின்றது.

தற்போதுள்ள தகவல்களுக்கமைய பெரிய கப்பல்களில் சர்வதேச எல்லைக்குள் போதைப்பொருள் கொண்டுவரப்படும் அதேநேரம், சிறிய படகுகள் ஊடாக நாட்டிற்குள் அனுப்படுவதோடு போதைப்பொருள் வலையமைப்பும் பெருமளவில் வியாபிக்கிறது.

போதைப்பொருள் வியாபாரத்திற்கு இணையாக ஆயுத விற்பனையும் இடம்பெறுகிறது. அது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதனால் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். அதற்கான புதிய சட்டங்களை கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கான புதிய போதைப்பொருள் தடுப்பு கட்டளை நிறுவனமொன்று நிறுவப்படும். அதற்கான சட்டம் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதனை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்பித்து நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். – என்றும் அவர் தெரிவித்தார்.

கடற்படை தளபதி வயிஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா உள்ளிட்ட கடற்படையில் உயர் அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# திருகோணமலை மாவட்ட செயலகத்தில் சர்வ மத தலைவர்கள் சந்திப்புக் கூட்டம்



(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் சர்வ மத தலைவர்கள் சந்திப்பு கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நடைபெற்றது.

மதரீதியான பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றைப் புரிந்துணர்வுடன் தீர்ப்பது குறித்தும், பிரச்சினைகள் வருவதற்கு முன்னர் அவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும், புதிய பிரச்சினைகள் ஏற்படாமல் தவிர்ப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மதங்களுக்கு இடையில் நட்புறவை ஏற்படுத்தி அதன் மூலம் சிறந்த சமூகங்களை உருவாக்குதல் இக்கூட்டத்தின் முக்கிய நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது

CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

# 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES




## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™ GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

## Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அந்த இருவரில் ஒருவர் முன்னாள் விடுதலைப் புலிச் செயற்பாட்டாளர் என்று கூறப்பட்ட எமில் காந்தன் (நிக்கலாப் பிள்ளை அன்டனி எமில் லட்சுமி காந்தன் அல்லது ரமேஷ்). மற்றவர் முருகேசன் ஸ்ரீசண்முகராஜா.

இதில் அதிகம் பெயர் அடிபட்டவர் எமில் காந்தன். ஆஜபாகுவான – சிவந்த – எடுப்பான – தோற்றம். மூன்று மொழிகளிலும் சரளமாக உரையாட கூடிய கலகலப்பான நபர் அவர்.

நேற்றைய வர்த்தமானி அறிவித்தலை அடுத்து அவரைப் பற்றி பலத்த விசாரிப்புகள்.

கொழும்பில் மத்திய வங்கி மீது புலிகள் நடத்திய குண்டுத் தாக்குதலை அடுத்து சந்தேகத்தில் கைதான எமில்காந்தன், களுத்துறையில் 1998 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு சூத்திரதாரி என்ற பேச்சு உண்டு. எனினும் அந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட 15 பேரில் ஆறு பேருக்கு பத்தரை ஆண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட, எமில் காந்தன் உட்பட ஒன்பது பேர் குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கப்பட்டனர்.

மற்றைய வழக்குகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டு வெளியே வந்த எமில் காந்தன், இப்போது பொதுசன பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் டிரான் அலஸுடன் அச்சமயத்திலேயே மிக நெருக்கமானவரானார்.

2005 ஆம் ஆண்டு நவம்பர் ஜனாதிபதித் தேர்தல் சமயம் அப்போதைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்காக அவரின் சார்பிலான பிரதிநிதிகள் குழு ஒன்று வன்னிக்குச் சென்று புலிகளின் வன்னி நிர்வாக பிரிவின் பொறுப்பாளர் பூவண்ணனைச் சந்தித்தது. அந்தச் சந்திப்புக்கான ஏற்பாட்டாளராக எமில் காந்தனே செயற்பட்டார் என்று கூறப்படுகின்றது. அவரே டிரான் அலஸ், பஸில் ராஜபக்ஷ ஆகியோரை அழைத்துச் சென்று, பூவண்ணன் குழுவினரைச் சந்திக்க ஒழுங்கு செய்தார்.

அப்போது நிதிப் பரிமாற்றம் பற்றி பேசப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அந்த உரையாடல் விவகாரங்களுக்கு இடைத்தரகராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் எமில் காந்தனே செயல்பட்டார்.

அந்தச்சந்திப்புக்குப்பின்னரே அத்தேர்தலில் தமிழ் மக்களை வாக்களிக்கக் கூடாது என்ற வழிகாட்டலை புலிகள் அறிவிப்பாக விடுத்தனர். அந்த அறிவிப்பே மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

எமில் காந்தன் ஏற்பாடு செய்த சந்திப்பின்போதே புலிகளுக்குக் கையூட்டாக நிதி வழங்கும் ஒழுங்கு செய்யப்பட்டது என்றும், அதை ஏற்றே புலிகள் அப்படி ஒரு முடிவுக்கு வந்தனர் என்றும் செய்திகள் பின்னர் வெளியாகின.

அப்படிப் புலிகளுக்கு வழங்கப்பட்டதாக மஹிந்த தரப்புக்கு காட்டப்பட்ட நிதியில் பெருந்தொகை உண்மையில் புலிகளுக்குச் செல்லவே இல்லை என்பது சில ஆண்டுகள் கழித்தே மஹிந்த தரப்புக்கு உறுதியானமையை அடுத்து மஹிந்த தரப்பினர் அச்சமயம் புலிகளுடன் பேச்சில் ஈடுபட்ட பிரமுகர்கள் மீது கடுப்பில் இருந்தனர் என்றும் கூடத் தெரிவிக்கப்பட்டது.

மஹிந்த ஜனாதிபதி ஆனதும் புனரமைப்பு அபிவிருத்தி அதிகார சபை (RADA) என்ற கட்டமைப்பின் தலைவராக டிரான் அலஸ் நியமிக்கப்பட்டார். அதனுடன் சேர்ந்து நெருக்கமாகச் செயற்பட்டார் எமில் காந்தன்.

சில காலம் கழித்து முன்னர் புலிகளுக்கு வழங்கப்பட்டதாக கூறப்பட்ட பணம் குறித்து மஹிந்த தரப்புக்கு ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து , டிரான் அலஸின் நிறுவனங்கள் மீது பாதுகாப்புத் தரப்பினர் பாயத் தொடங்கினர். விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. டிரான் அலஸின் நிறுவனக் கணக்காளர் வரைப் பலர் புலனாய்வுப் பிரிவினரால் குடையப்பட்டனர்.

இந்தச் சூழலில்தான் RADAஅமைப்பின் கீழ் வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு 1,600 வீடுகளை மீள அமைத்து கொடுத்தல் என்ற பெயரில் ஒதுக்கப்பட்ட 20 கோடி ரூபா முழுமையாகச் சூறையாடப்பட்டது என்ற வழக்கு டிரான் அலஸ் மீதும் எமில் காந்தன் மற்றும் இருவர் மீதும் தொடரப்பட்டது. வெளிநாட்டிலிருந்த எமில் காந்தன் நாட்டில் இல்லாத நிலையில், அவரின்றியே அவர் உட்பட நால்வருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

எமில் காந்தனின் பெயர் 2014 பெப்ரவரியில் வெளியான வர்த்தமானியிலேயே கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டதாயினும், 2010 ஜுலையிலேயே அவர் தொடர்பில் சர்வதேச பொலிஸான 'இண்டர்போல்' சிவப்பு எச்சரிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2019 ஜனாதிபதி தேர்தலோடு நாட்டில் அரசியல் நிலைமைகள் தலைகீழாக மாறின. மஹிந்த தரப்புக்கு எதிரணியில் நின்ற டிரான் அலஸும் மீண்டும் ராஜபக்ஷ தரப்புடன் இணைய, வழக்கு கை வாங்கப்பட்டது. முக்கிய சாட்சி பிறழ்ந்தமையால் வழக்கைத் தொடர முடியவில்லை என்று சட்டமாஅதிபர் தரப்பு நீதிமன்றத்தில் தெரிவிக்க, டிரான் அலஸ் எமில் காந்தன் உட்பட நால்வரும் 2020 ஜுலையில் விடுதலையாகினர். வழக்குக்கு நேரில் முகம் கொடுக்காமலேயே எமில் காந்தன் விடுவிக்கப்பட்டார்.

ஆனால் இவ்வளவும் நடந்து கொண்டிருக்கும் போது எமில் காந்தன் தன்னை – தனது வல்லமையை – டுபாயில் நிரூபித்துக் கொண்டிருந்தார். தமக்குக் கிட்டிய நிதி மூலம் அங்கு தன்னை ஒரு பெரும் வர்த்தகப் புள்ளியாக நிலை நிறுத்தினார். ரஷ்யாவிலும் டுபாயிலும் மது தொழிற்சாலைகளோடு, பல வர்த்தக நடவடிக்கைகளை விரிவு படுத்தினார். வர்த்தகச் செயற்பாடுகளை பல கட்டங்களில் முன்னெடுத்தார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் அவர் மீண்டும் அடிக்கடி இலங்கைக்கு வந்து செல்லத் தொடங்கினார். பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புடையோரின் பட்டியலில் அவரது பெயர் இருந்த போதும் அவர் இந்தக் காலகட்டத்தில் இலங்கைக்கு சகஜமாக வந்து போவதை அந்தக் கறுப்புப் பட்டியல் தடுக்கவே இல்லை.

டிரான் அலஸ் தரப்பினருக்கு சொந்தமான ஐக்கிய மக்கள் கட்சியின் (சின்னம் : செல்போன்) அரசியல் செயற்பாடுகளை தமது இடமான வவுனியாப் பகுதிகளில் முன்னெடுத்து வரும் எமில் காந்தன் வன்னியில் நேரடி அரசியலிலும் குதிக்க வாய்ப்புகள் இருக்கின்றன என்றே தெரிகின்றது.

அவருக்கு மிக நெருக்கமான – அவரின் சகாவான – டிரான் அலஸ்தான் இப்போது பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர்.

'அகப்பை பிடித்தவன் தன்னவனானால் அடிப்பந்தியில் இருந்தால் என்ன? கடைப்பந்தியில் இருந்தால் என்ன?' என்ற சொலவடை உண்டு.

பொதுசனப் பாதுகாப்பு அமைச்சரே எமில் காந்தனின் ஆள் என்றால், அவரின் பெயர் பயங்கரவாத தொடர்பு பட்டியலில் இருந்து நீக்கப்படுவதில் வியப்பேதும் உண்டா?

## அரசைக் கவிழ்க்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கவிழ்க்க வாய்ப்பு இருக்கின்றது.

எதிர்வரும் வரவு – செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கும் திறனைப் பொதுஜன பெரமுன கொண்டுள்ளது. ஆனால், அவ்வாறு சந்தர்ப்பவாதியாக நான் ஒருபோதும் செயற்படமாட்டேன்.

அமைச்சர்கள் நீக்கப்படுவதால் பயன் இல்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் செய்யக்கூடிய பல விடயங்கள் இருக்கின்றன." – என்றார்.

## 'மொட்டு' ஆதரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சுப் பதவிகளை வழங்குவதில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று பொதுஜன பெரமுனவின் உயர்மட்டத் தலைவர்கள் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

ஆனால், மக்கள் கடும் நெருக்கடியில் இருக்கும் வேளையில் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் மக்களின் பணத்தை வீணடிக்க ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று பொதுஜனபெரமுனவின்தலைவர்களுக்கு ஜனாதிபதி பதில் அளித்துள்ளார்.

இதற்குப் பொதுஜன பெரமுனவின் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட தலைவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க வேண்டும் என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ மற்றும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தார்.

இம்முறையும் அமைச்சரவை மாற்றத்தின் போது ஜனாதிபதி தமது கோரிக்கைகளை நிராகரித்துள்ளதால் பொதுஜன பெரமுனவின் தலைமை ஜனாதிபதி மீது கடும் அதிருப்தி அடைந்துள்ளது என்று அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், இந்த அரசைத் தொடர்ந்து கொண்டு செல்ல ஜனாதிபதிக்குப் பொதுஜன பெரமுன ஆதரவளிக்காவிட்டால்உடனடியாகநாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளார் என்றும் தரப்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கிழக்குத் தலைமைகள்

இலங்கையின் பூர்வீகக் குடிகளான வடக்கு - கிழக்குத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது.

வடக்கும் கிழக்கும் அவர்களின் பூர்வீக தாயகம் எனினும், காலவோட்டத்தில் அவர்கள் எதிர்கொண்ட இனவாத அடக்குமுறைகள், எதேச்சாதிகாரக் கெடுபிடிகள், திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள், ஆக்கிரமிப்புகள் போன்றவை காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் அவர்கள் இப்போது எதிர்கொள்ளும் சிக்கல்களும் பிரச்சினைகளும் கூட வெவ்வேறு வடிவங்களில் பரிணமித்திருக்கின்றமை கண்கூடு.

கிழக்கில் இரண்டு முனை ஆக்கிரமிப்பை தாங்கள் எதிர்கொள்கின்றனர் என்று கிழக்குத் தமிழர்கள் கருதுகின்றார்கள்.

ஒன்று - பௌத்த, சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பு. இது கிழக்கில் மட்டுமல்ல, தமிழர் தாயகம் எங்கும் பௌத்த - சிங்கள அரசின் தேசிய கொள்கை திட்டமாக பெருத்த எடுப்பில் முன்னெடுக்கப்படுகின்றது. அடுத்தது - முஸ்லிம் மக்களின் அத்துமீறல்.

தமிழினமும், ஒரு காலத்தில் அவர்களுடன் 'தமிழ்ப் பேசும் மக்கள்' குழுமமாக செயற்பட்டு, பின்னர் இலங்கை முஸ்லிம்கள் என்ற தனித்துவ இனக் குழுமமாக தங்களைக் கருதி இயங்கும் முஸ்லிம்களும் எழுபதுகள் வரை ஒன்றுபட்ட கட்டமைப்பிலேயே இயங்கி வந்தனர். தமிழ்ப் பேசும் மக்கள் என்ற வகையில் பேரினவாதத்தினால் தாங்கள் கபளீகரம் செய்யப்படுகின்றனர் என்ற யதார்த்தப் புறநிலைமை, பாதிக்கப்படும் சிறுபான்மையினர் என்ற வரையறையின் கீழ் ஒன்றாக அவர்களைக் கட்டிப்போட்டிருந்தது. எனினும், இரண்டு இனப் பிரிவுகளின் தலைவர்களின் தூர நோக்கற்ற - பொறுப்பற்ற - சுயநலன் கொண்ட - செயற்போக்கும், பௌத்த - சிங்கள ஆட்சியாளர்களின் பிரித்தாளும் தந்திரமும், பாதிக்கப்பட்ட சிறுபான்மை இனங்களான தமிழர்களையும் முஸ்லிம்களையும் இன்றைய மோதல் நிலைக்கு இட்டு வந்து சந்தியில் நிறுத்தி இருக்கின்றன.

இத்தகைய நெருக்கடிச் சிக்கலில் வாழும் கிழக்குத் தமிழர்களின் அரசியல் தலைமைத்துவங்களும் இரண்டு கன்னைகளாகப் பிரிந்து நின்று செயல்படுவது வெளிப்படையானது.

ஒருபுறம் - பிள்ளையான், வியாழேந்திரன், கருணா போன்ற அரசியல்வாதிகள். முஸ்லிம்களுக்கு எதிரான கடும் குரோத உணர்வை வளர்த்து அரசியல் செய்யும் இவர்கள் கொழும்பின் பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் அடிவருடிகள் என்பதால் அத்தகைய தரப்பின் அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக வலிமையாகக் குரல் எழுப்பும் திராணியற்றவர்களாகப் பார்த்திருக்கிறார்கள்.

மறுபுறம் - சாணக்கியன் போன்றோர். பௌத்த, சிங்களப் பேரினவாதக் கொடூரங்கள, அடக்குமுறைகள், ஆக்கிரமிப்புகள், அத்துமீறல்களுக்கு எதிராகக் கொதித்தெழுகின்ற இவர்கள், முஸ்லிம்களை பாதிக்கப்பட்ட மற்றொரு - சக - சிறுபான்மையினராகக் கருதி அவர்களையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்ற பொதுவான கருத்தியலில் செயல்படுபவர்கள். எனினும் கிழக்குத் தமிழ்த் தேசியத் தரப்பிலும் முஸ்லிம்களுடன் முரண்டு பிடித்து, முட்டி மோதி, அரசியல் செய்யும் தலைமைகளும் சக்திகளும் இல்லாமல் இல்லை.

கிழக்குத் தொடர்பில் தமிழ் தலைமைகள் மட்டத்தில் தெளிவான - உருப்படியான - தூரநோக்கம் கொண்ட - சிந்தனை போக்கு இல்லை என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

# "நாம் 200" நிகழ்வு நவம்பர் 2 இல்

## ஜனாதிபதி - பிரதமர் தலைமையில் நடைபெறும் என்கிறார் அமைச்சர் ஜீவன்

"நாம் 200" நிகழ்வு ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 02 ஆம் திகதி நடைபெறும் என்று நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், இந்த ஆண்டு இறுதி வரை நீர் கட்டணங்கள் திருத்தப்பட மாட்டாது என்றும், 2024 ஜனவரி முதல் நீர் கட்டண சூத்திரம் ஒன்றை அறிமுகப்படுத்த அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான்,

"நீர்க் கட்டணம் தொடர்பில் பல்வேறு தவறான கருத்துகள் பரப்பப்படுகின்றன. நீர்க் கட்டணம் இதற்கு மேல் அதிகரிக்கப்பட மாட்டாது. கடந்த ஓகஸ்ட் மாதம் நீர்க் கட்டணம் அதிகரிக்கப்பட்டாலும்கூட, குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் குறைந்தளவில் நீரைப் பயன்படுத்துபவர்களுக்கும் நீர்க் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. மின் கட்டண அதிகரிப்பு உட்பட குடிநீர் சுத்திகரிப்புப் பணிகளுக்கான செலவுகள் அதிகரிப்பும் கடந்த காலங்களில் நீர்க் கட்டண அதிகரிப்பில் தாக்கம் செலுத்தியது. அடுத்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் நீர்க்கட்டண சூத்திரம் அறிமுகப்படுத்தப்படும்.

"நாம் 200" என்ற நிகழ்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 02 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட பல்வேறு அதிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். இந்தியாவில் இருந்தும் அதிதிகள் வருகை தரவுள்ளனர். மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வருவதற்கே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், நாம் மலையக மக்களின் காணி உரிமை தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பித்துள்ளோம். நாளை அமைச்சரவை உப குழு கூடவுள்ளது. இது ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறும். இந்த உப குழுவில் எடுக்கப்படும் முடிவின் பிரகாரம் எதிர்வரும் 30 ஆம் திகதி இது குறித்து ஒரு தெளிவான முடிவு கிடைக்கும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினால் நிச்சயம் கிடைக்கும். இதன் மூலம் காணி உரிமை தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படும்.

அதேபோன்று, இதுவரை மலையக மக்களின் மேம்பாட்டுக்காக வரவு செலவுத்திட்டத்தில் 3000 மில்லியன்களே ஒதுக்கப்பட்டு வந்துள்ளது. இதில் சுமார் 2000 - 2500 மில்லியன்கள் வீட்டுத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகின்றது. ஆனால் இந்த வீட்டுத்திட்டங்கள் இலவசமாக மக்களுக்கு கையளிக்கப்படுவதில்லை. இவ்வாறு அமைச்சின் ஊடாக வழங்கப்படும் வீடுகளுக்கு செலவழிக்கப்பட்ட தொகையில் 50 சதவீதத்தை குறித்த மக்கள் அரசுக்குத் திருப்பி வழங்க வேண்டியுள்ளது. ஏற்கனவே வறுமையில் இருக்கும் மக்களால் இவ்வாறு வழங்குவது சாத்தியமற்றதாகவே உள்ளது. எனவே எஞ்சிய சுமார் 500 மில்லியன்களை வைத்து மக்களின் ஏனைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

தற்போது நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்பட்டாலும் கூட இது ஒரு சமூக ரீதியிலான பிரச்சினையாக இருப்பதால், இந்த முறை வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு 15,000 மில்லியன்களாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளோம். இது ஐந்து மடங்கு அதிகரிப்பாகும். எனவே இவ்வாறு கிடைக்கவிருக்கும் நிதியை முறையாக திட்டமிட்டு சரியான வேலைத்திட்டங்களுக்கு பயன்படுத்துவோமாயின் நான் இந்தப் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒவ்வொரு வருடமும் இந்த நிதி இந்த சமூகத்துக்குக் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

மேலும், பல்கலைக்கழகம் தொடர்பிலும் நாம் இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடியுள்ளோம். இந்திய அரசாங்கம் ஏற்கனவே எமக்கு 08▶

## ஜனாதிபதி - பிரதமர்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

3000 மில்லியன்களை வழங்கியுள்ளது. இதன் மூலம் நாம் வெறுமனே கண்துடைப்புக்காக செய்யப்படும் மாற்றங்களுக்குப் பதிலாக, நிரந்தர மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்காக அமைச்சின் ஊடாக ஒரு செயற்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த செயற்குழுவில் அரசியல்வாதிகள் எவரும் அங்கம் வகிக்கவில்லை என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். மலையகத்தை சேர்ந்த புத்திஜீவிகள் உட்பட பேராசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களால் வழங்கப்படும் திட்டவரைவு எமக்கு கிடைத்தவுடன் அதனை இந்திய அரசுக்கு வழங்குவோம். அதே நேரம் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அதனை வழங்கவுள்ளோம். அவர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளையும் பெற்று அதனை நடைமுறைத்த திட்டமிட்டுள்ளோம்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகம் ஸ்தாபிப்பதற்கான அதிகமான வாய்ப்புகள் உள்ளன. ஏற்கனவே பல்கலைக்கழகம் ஸ்தாபிப்பதற்கான இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த விடயம் கல்வி அமைச்சினாலே முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளதால், நான் கல்வி அமைச்சருடனும் இது குறித்து கலந்துரையாடியுள்ளேன். அவர் இந்த விடயத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதாக தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தோட்டத் தொழிலாளர் தொடர்பில் நடைமுறையில் இருந்த கூட்டு ஒப்பந்தம் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும். அது மிக முக்கியமானது. அது ஒரு பொறி முறை ஆகும்.

அதேபோன்று இந்திய வீட்டுத்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. முன்னர் தோட்டத்தில் தொழில் செய்தால் தான் வீடு என்று இருந்த நிலையை மாற்றி தோட்டத்தில் பிறந்தால் வீடு என்ற விடயத்தைக் கொண்டுவந்துள்ளோம். அடுத்தது, கடந்த காலங்களில் வீட்டுத்திட்டங்கள் வரும்போது குறித்த சில எண்ணிக்கையிலான காணிகள் விடுவிக்கப்பட்டன. ஆனால் நாம் இம்முறை ஒரே தடவையில் மொத்தமாக 1785 காணிகளை விடுவிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளோம். இதில் முதல் கட்டமாக சுமார் 1300 வீடுகளை நிர்மாணிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்காக அமைச்சரவை மூலம் ஒரு குழுவை நியமிக்கவுள்ளோம். அதில் எனது அமைச்சின் செயலாளர் உட்பட மின்சாரம், நீர் வழங்கல், வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு அமைச்சுகளின் முக்கியமான அதிகாரிகள் அங்கம் வகிக்கவுள்ளனர். இந்த வீட்டுத்திட்டம் அவர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும். அவ்வாறு செயற்படுத்தப்படும் போது மக்களுக்கு சகல வசதிகளும் ஒரே நேரத்தில் கிடைக்கும். எனவே இவ்விடயம் தொடர்பில் பொறிமுறை ஒன்றை கொண்டுவரவுள்ளோம்." - என்றார்.

## மக்களைத் தாக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரியுள்ளது.

கண் நோய், வயிற்றுப்போக்கு மற்றும் சுவாசக் கோளாறுகளுடன் கூடிய காய்ச்சல் வேகமாகப் பரவுகின்றது என அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்த நோய்கள் பரவுவதைக் கட்டுப்படுத்த சுய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் குறிப்பாக அதிக மழை மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக இந்த நோய் நிலை தீவிரமாகக் கூடும் எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன எச்சரித்துள்ளார்.

## தாதியர் ஓய்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவில், ஏற்கனவே ஓய்வு பெற்ற அந்தந்தப் பதவிகளில் உள்ளவர்களையும் மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

மேன்முறையீட்டுநீதிமன்றத்தின்தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அண்மைய சில நாள்களாக வாடகைக்கு வீடு ஒன்றைப் பெற்றுத் தங்கி வந்த இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டு வீட்டின் பின்பாக வுள்ள மலசலகூடத்துக்கு அருகே குழி தோண்டிப் புதைக்கப்பட்ட நிலையில் சடலமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு, 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த த.கீதா (வயது 23), முள்ளியவளை குமாரபுரத்தைச் சேர்ந்த இளைஞர் (வயது 23) ஒருவரைத் திருமணம் முடித்து நீராவிப்பிட்டி கிழக்குப் பகுதியிலுள்ள வாடகை வீடொன்றில் கடந்த மூன்று வாரங்களாக வசித்து வந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இளம் குடும்பஸ்தரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தப் பெண் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.சங்கீத் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது. அதன் போது சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ, தடயவியல் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், பொலிஸார் ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர்.

அந்த இளம் குடும்பப் பெண் தொலைபேசியில் தனது தாயாருடன் நாளாந்தம் உரையாடுவார் எனக் கூறப்பட்டது. கடந்த 21 ஆம் திகதிக்கு பின்னர் மகளின் தொலைபேசி துண்டிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் மகளும் மருமகனும் வசிக்கும் வீட்டுக்குத் தாய் சென்று பார்த்த போது வீட்டில் யாரும் இல்லாத நிலையில், அவர்கள் தங்கி இருந்த வீட்டின் பின்புறம் புதிதாக மண்ணால் நிரப்பப்பட்ட குழி ஒன்று காணப்பட்டது என்று தாயார் தெரிவித்திருந்தார்.

இதனால் சந்தேகம் அடைந்த அந்த இளம் குடும்பப் பெண்ணின் தாயார் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அது பற்றிய செய்தி நேற்றைய காலை முரசில் பிரசுரமாகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பௌத்த மாவட்டமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட கிளைத் தலைவர் எஸ்.குகதாஸன் தலைமையில் நேற்று பல்வேறுபட்ட சந்திப்புக்கள் நடைபெற்றன. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திருகோணமலை மாவட்டத்தில் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்தும் மக்கள் இங்கே வருகை தந்து தங்களுடைய பல பிரச்சினைகளை எமக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றார்கள்.

இதில் பிரதானமான பிரச்சினையாக நில அபகரிப்பு தொடர்பிலேயே பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, மூதூர் கங்குவேலி குளத்தை ஆக்கிரமித்து அந்தக் குளத்தை நம்பி விவசாயம் செய்கின்ற தமிழ் - முஸ்லிம் மக்களுடைய விவசாய செய்கையைக் குழப்பும் நோக்கில் குளத்தில் காணப்பட்ட நீரை வெளியேற்றி குளத்துக்குள்ளேயே வேற்று இனத்தவர்கள் வருகை தந்து விவசாயம் செய்து வருகின்றனர்.

இது தொடர்பில் பல முறைப்பாடுகள் எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட்டிருந்தும் எதுவித நடவடிக்கை எடுக்கவில்லை. நீர்ப்பாசன அதிகாரிகளிடம் முறையிடுமாறு பொலிஸார் கூறுகின்றனர். எனினும், அவர்களிடத்தில் முறையிட்டும் எது வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தை ஒரு பௌத்த மாவட்டமாக மாற்றுகின்ற நீண்ட காலத் திட்டம் இப்போது துரிதகதியில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. விசேடமாக குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 30 இற்கும் மேற்பட்ட புத்தர் சிலைகளையும், பௌத்த விகாரைகளையும் அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் 23 இடங்களில் வேலைகள் இடம்பெற்று வருகின்றன. பௌத்த மக்கள் வாழாத இடத்தில் கூட புத்தர் சிலைகளை நிர்ணயிக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண ஆளுநர் தடை விதித்தாலும் கூட பாதுகாப்புப் பிரிவின் அனுசரணையுடன் நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றன." - என்றார்.

# இந்தியர்களுக்கு விசா தேவையில்லை: இலங்கையின் அறிவிப்புக்கு வரவேற்பு

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு செல்ல விசா தேவையில்லை என்ற இலங்கை அரசின் அறிவிப்புக்கு இந்திய சுற்றுலா பயணிகள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இந்தியா, சீனா, ரஷியா, மலேசியா, ஜப்பான், இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய ஏழு நாடு களைச் சேர்ந்த பயணிகளுக்கு ஐந்து மாதங்களுக்கு இலவச விசா வழங்குவதற்கு இலங்கை அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கடந்த செவ்வாய்க் கிழமை இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

இந்த திட்டத்தை எதிர்வரும் மார்ச் 31 ஆம் ஆம் வரை சோதனை முயற்சியாக அமல்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.




இந்த சோதனை முயற்சியின் அடிப்படையில், இந்த ஏழு நாடுகளுக்கும் நிரந்தரமாக விசா தேவையில்லை என்ற அறிவிப்பு வெளியாகவுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இந்த இலவச விசா அறிவிப்பை, தமிழக சுற்றுலா பயணிகள் மற்றும் பல்வேறு தரப்பினரும் வரவேற்றுள்ளனர். இலங்கை அரசு தற்பொழுது இந்தியாவுடன் நல்ல உறவுகள் வைத்து இருக்கிறது. உறவுகளை மேலும் வளர்த்துக் கொள்வதற்காகவும் இது போன்ற சலுகைகள் மூலம் இந்தியா மற்றும் இலங்கை வர்த்தக மூலமாக இரு நாடுகளும் வலுவடையும் ஆதாரமாக இருக்கும் என்பதையும் சுற்றுலா பயணிகள் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் இலங்கைக்கு இந்தியாவில் இருந்து அதிக அளவில் சுற்றுலா பயணிகள் தினந்தோறும் செல்கிறார்கள். இலங்கைக்கு வருவதற்கு விசா இல்லாமல் சுற்றுலாவுக்கு வருகை மூலம் இலங்கை மேலும் வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

.இலங்கைக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என தெரிவிக்கப்படுகிறது.

# நடிகர் விநாயகன் கேரளாவில் கைது!

'ஜெயிலர்' திரைப்படத்தின் வில்லன் நடிகர் விநாயகனை கேரள பொலிஸ ாரால் கைது செய்துள்ளனர்.

மதுபோதையில்பொலிஸ் நிலையத்தில் ரகளையில் ஈடுபட்ட காரணத்துக்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நடிகர் விநாயகன், மலையாளம் மற்றும் தமிழ் சினிமாவில் நடித்து வருகிறார். கடந்த ஒகஸ்ட் மாதம் ரஜினிகாந்த் நாயகனாக நடித்து வெளிவந்த 'ஜெயிலர்' படத்தில் வில்லனாக விநாயகன் நடித்திருந்தார். 'வர்மன்' என்ற பாத்திரத்தில் மிரட்டலான நடிப்பை வெளிப்படுத்தி இருந்தார்.

தமிழில் 'திமிரு', 'மரியான்' போன்ற படங்களில் நடித்து கவனம் ஈர்த்துள்ளார். மலையாளத்தில் வெளியான 'கம்மாட்டிப்பாடம்' படத்துக்காக மாநில அளவில் சிறந்த நடிகர் விருதை வென்றுள்ளார். இந்த நிலையில் நேற்று எர்ணாகுளம் வடக்கு பொலிஸ் நிலையத்தில் அவர் ஆஜரானார்.

அவர் வசித்து வரும் அடுக்குமாடி



குடியிருப்பில் குழப்பத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அதன் பேரில் அவர் பொலிஸ் நிலையத்துக்கு சென்றுள்ளார். இதன்போது அவர் பொலிஸ் நிலையத்தில் ரகளையில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது அவர் மது போதையில் இருந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. இதனை பொலிஸ் அதிகாரி ஒருவர் உறுதி செய்துள்ளார்.

பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர். அத்துடன், அவரை மருத்துவ பரிசோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# விஜய்யுடன் இணைந்து செயல்படத் தயார்: சீமான் கருத்து



நடிகர் விஜய்யுடன் இணைவது உங்களுக்கு மகிழ்ச்சி என்றால் நாங்கள் இரண்டு பேரும் இணைந்து செயல்படத் தயார் என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் மாவட்ட அளவிலான கலந்தாய்வு கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பங்கேற்ற நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக் கையில்,

எந்த காலத்திலும் தேசிய, திராவிட கட்சிகளுடன் கூட்டணி என்பது கிடையவே கிடையாது. நடிகர் விஜய்யுடன் இணைவது உங்களுக்கு மகிழ்ச்சி என்றால் நாங்கள் இரண்டு பேரும் இணைந்து செயல் படத் தயார். அவர் வர வேண்டும் கட்சி ஆரம்பிக்க வேண்டும். அவரது கொள்கைகளை சொல்ல வேண்டும்.

நான் தான் முன்னாடி நிற்கும் அண்ணன் அவர் தான் என்னோடு வருவதா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

நான் போய் கேட்க முடியாது, அவர் கட்சி ஆரம்பிக்கும்போது அவரிடம் நாம் தமிழர் கட்சியுடன் இணைந்து பணியாற்றுவீர்களா என அவரிடம் கேளுங்கள் என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராக இஸ்லாமிய நாடுகள் ஒன்றிணைய வேண்டும்

## - ஈரான் ஜனாதிபதி அழைப்பு



இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்கு எதிராக இஸ்லாமிய உலகம் ஒன்றிணைய வேண்டும் என்று ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரெய்சி தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய நாடுகள் ஒற்றுமையாக இருந்திருந்தால் இஸ்ரேல் இன்று இதுபோல் காசாவில் குண்டுமழை பொழிந்திருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கான சவுதி தூதர் அப்துல்லா பின் சவுத் அல் அனாஸியை வரவேற்றுப் பேசிய ஜனாதிபதி இப்ரஹிம் ரைஸி, ஒன்றிணைந்த முஸ்லிம் நாடுகளின் ஒருமித்த நிலைப்பாடு இன்று இஸ்ரேலிய ஆக்கிரமிப்பில் இருந்தும், அதன் மேற்கத்திய ஆதரவாளர்களிடமிருந்தும் அவர்களின் அடக்குமுறைகளிலும் முஸ்லிம்களைக் காப்பாற்றியிருக்கும்.

இனியாவது இஸ்லாமிய நாடுகளின் ஒற்றுமை ஓங்க வேண்டும்.

மத்தியக் கிழக்கு நாடுகளில் ஆதிக்கத்தைப் பெற ஈரானும், சவுதியும் மோதல் போக்கை கடந்த காலங்களில் கடைபிடித்து வந்தன.

தற்போது பகையை மறந்து நட்புறவில் இரு நாடுகளும் ஈடுபடத் தொடங்கியுள்ளன. இந்த நிலையில், சர்வதேச கவனத்தை ஈர்த்து வருகிறது. ஈரான் – சவுதி அரேபியா இடையே நடைபெற்று வரும் பேச்சுக்கள் வளைகுடா நாடுகளின் பாதுகாப்பில் முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# ஐஸ்லாந்தில் சமவுரிமை கோரி ஒருநாள் வேலைநிறுத்தம்!




ஐஸ்லாந்தில் சமவுரிமை வழங்கப்பட வேண்டும் என கோரி ஒருநாள் வேலை நிறுத்த போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் ஐஸ்லாந்தின் பல்லாயிரக்கணக்கான பெண்கள் பங்கேற்றுள்ளனர். அந்த நாட்டின் பிரதமர் கத்ரின் ஜகோப்ஸ்டிட்டிரும் கலந்துக்கொண்டார்.

பாலினம் அடிப்படையிலான ஊதிய இடைவெளி மற்றும் வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த 1975 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வாறான போராட்டம் முன்னெடுக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இந்தநிலையில், அமைச்சரவையில் உள்ள சகல பெண்களும் இந்த போராட்டத்தில் இணைந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரியமாக ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் துறைகளுடன் ஒப்பிடுகையில், பெண்கள் ஆதிக்கம் செலுத்தும் தொழில்கள் எவ்வாறு மதிப்பாய்வு செய்யப்படுகின்றன என்பதை ஐஸ்லாந்து அரசாங்கம் கவனித்து வருகின்றது.

ஐஸ்லாந்து இதுவரையிலும் முழுமையான பாலின சமத்துவத்துக்கான இலக்குகளை அடையவில்லை.

அத்துடன், பாலின அடிப்படையிலான ஊதிய இடைவெளியை ஐஸ்லாந்து தொடர்ந்தும் கடைபிடித்து வருகிறது.

இதனை தற்போது ஏற்றுக்கொள்ள முடியாது என ஐஸ்லாந்தின் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், குறித்த போராட்டத்துக்கு ஆதரவாக ஐஸ்லாந்தின் தொழிற்சங்கள் உட்பட உலகம் முழுவதும் உள்ள பல தொழிற்சங்கங்கள் தொடர்ந்தும் செயற்படுகின்றன என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

# கொங்கோ ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்து: 16 பேர் பலி

ஆபிரிக்காவின் கொங்கோ ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 16 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 11 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தின் போது காணாமல் போனவர்களை தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் கொங்கோ ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 40 பேர் வரை உயிரிழந்தனர்.

படகுகளில் கொண்டு செல்லப்படும் பொருட்களின் நிறை அதிகரித்து காணப்படுவதால் இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறுகின்றன என அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.





# இஸ்ரேலில் உயிரிழந்த இலங்கைப் பெண் உறவினரால் அடையாளம் காணப்பட்டார்

ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான தாக்குதலில் உயிரிழந்த இலங்கைப் பெண்ணான – களனி பகுதியைச் சேர்ந்த – அனுலா ஜயதிலக்கவின் உடல் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவரது சடலம் இஸ்ரேலின் பெட்டா திக்வாவில் அடையாளம் காணப்பட்டதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

இவர் கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதியன்று நடத்தப்பட்ட ஹமாஸ் – இஸ்ரேல் தாக்குதலில் காணாமல் போயிருந்த நிலையில், அவர் உயிரிழந்து விட்டார் என ஒக்டோபர் 17 ஆம் திகதி அந்த நாட்டு அதிகாரிகளினால் இஸ்ரேலிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்

நிலவும் மழையுடனான வானிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

13 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளைச் சேர்ந்த பல பகுதிகள் டெங்கு அதி அபாய வலயமாகக் காணப்படுகின்றன என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் நளின் ஆரியரத்ன குதெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 67 ஆயிரத்து 51 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே, இந்த மாதத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 568 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.





# இவ்வருடத்தில் மட்டும் 400 யானைகள் சாவு!

நாட்டில் இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 400 யானைகளின் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் சந்தன சூரியபண்டார கூறுகையில் –

இலங்கையில் சுமார் 6,000 யானைகள் மாத்திரமே காணப்படுகின்றன.

இதில் கிட்டத்தட்ட 200 யானைகள் மோதல்கள், துப்பாக்கிச் சூடுகள் மற்றும் வாகன விபத்துக்கள் போன்ற பல வேறு மனித செயற்பாடுகள் காரணமாக உயிரிழந்துள்ளன.

மேலும், பல்வேறு நோய் காரணமாகவும் யானைகள் உயிரிழந்துள்ளன. – என அவர் தெரிவித்தார்.




# முல்லைத்தீவு மத்திய பஸ் நிலையத்திலிருந்து நேற்றுத் தொடக்கம் பஸ் சேவைகள் ஆரம்பம்



நகர திட்டமிடல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் முல்லைத்தீவு நகரில் அமையப்பெற்றுள்ள மத்திய பஸ் நிலையத்தின் வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத நிலையில் 2020 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட போதும் இதுவரை காலமும் அது பயன்படுத்தப்படாமல் இருந்து வந்தது.

நகர திட்டமிடல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பஸ் நிலையக் கட்டட தொகுதி மீள்திருத்தம் செய்யப்பட்டு சில வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் நூறு வீதம் வேலைகள் பூர்த்தியடையாத நிலையில் பேச்சுவார்த்தை ஒன்றின் ஊடாக ஆறு மாத காலப்பகுதிக்குள் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்து தரப்படும் என வழங்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில் தனியார் பஸ உரிமையாளர்கள் நேற்றையதினம் மத்திய பஸ் நிலைய கட்டடத் தொகுதியில் இருந்து சேவையை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கணேசமூர்த்தி ஜெயபவானி, கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் சண்முகதாசன், கரைதுறைப்பற்று பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி திணைக்களத்தின் பிரதிநிதி, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் இ.ஜெகதீசன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், தனியார் பஸ் உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நாடா வெட்டி பஸ் சேவையை அங்கிருந்து ஆரம்பித்து வைத்தனர்.

இ.போ.ச. பஸ்கள் மத்திய பஸ் நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிப்பதற்கான ஒன்றிணைந்த நேர அட்டவணையைத் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்றையதினம் இடம்பெறவுள்ளது. இதன் பின்னர் அரச பஸ் சேவையும் மத்திய பஸ் நிலையத்திலிருந்து மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

இந்த மத்திய பஸ் நிலையம் 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த கதிர்காமத்தம்பி விமலநாதனினால் பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டிருந்த போதும் வேலைகள் முழுமை பெறாமையால் பஸ் சேவையை தம்மால் அங்கிருந்து நடத்த முடியாது என பஸ் சங்கத்தினர் தெரிவித்து, அந்த நிலையத்தைப் புறக்கணித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







# கொழும்பில் நேற்று துப்பாக்கிச் சூடா? நிலைமையை விளக்கியது பொலிஸ்!

கொழும்பு டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் உள்ள மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திற்கு அருகில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு இருவர் கடத்தப்பட்டனர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், சம்பவம் குறித்து பொலிஸார் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதன்படி, போதைப்பொருள் கடத்தல்காரர்கள் குழுவொன்று சொகுசு காரில் வந்துள்ளது. ஓட்டோவில் இருந்த பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் அவர்களைக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக சொகுசு காரில் வந்த இருவரை ஓட்டோவில் வந்த குழுவினர் துப்பாக்கிச் சூடு நடத்தியமையுடன், இருவரையும் கடத்திச் சென்றனர் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எவ்வாறாயினும், சொகுசு காரில் பயணித்த இருவரும் பொலிஸாரின் சோதனையின் பின் அழைத்துச் செல்லப்பட்டனர் எனத் தற்போது தெரியவந்துள்ளது.

இது பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சம்பவம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கைதடி மத்தியில் கிணற்று நீரை பவுஸரில் தொடர்ந்து ஏற்றிச் செல்வதற்கு எதிர்ப்பு!

**(த.சுபேசன்)**

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கைதடி மத்திப் பகுதியில் உள்ள நன்னீர் கிணறொன்றில் தனியார் நிறுவனம் ஒன்று தொடர்ச்சியாக நீர் எடுத்து வருவதால் கிராமத்தில் உள்ள நன்னீர் கிணறுகளில் நீர் வற்றிப் போவதாக கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக கைதடி மத்தி கிராம மக்கள் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்ற கடலுணவு உற்பத்தி நிறுவனம் ஒன்று கைதடி மத்தியில் அமைந்துள்ள – தனக்கு உரித்தான – காணியில் உள்ள கிணற்றில் இருந்து தொடர்ச்சியாக பவுஸரில் நீர் எடுத்து வருகின்றது.

இதனால் அதனை அண்மித்துள்ள எமது வீட்டுக் கிணறுகளில் நீர் வற்றிப் போகின்ற நிலை காணப்படுகிறது.

இதனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி தனியார் நிறுவனம் நீர் எடுக்க பவுஸரில் வந்த போது எமது கிராமத்தில் உள்ள சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்கள் நீரை எடுக்க விடாமல் தடுத்திருந்தனர்.

இதனையடுத்து அந்த நிறுவனம் சனசமூக நிலைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தது. சனசமூக நிலைய உறுப்பினர்கள் ஆறு பேர் பொலிஸாரால் கைதாகி அன்றைய தினமே விடுவிக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி நிறுவனம் நீரை எடுப்பதற்கான அனுமதியைக் கொண்டுள்ளனர். இருப்பினும் இதனால் கிராம மக்கள் நன்னீரின்றி அல்லலுறும் நிலை காணப்படுகிறது.

இதற்கு நீதிமன்றத்தை நாடி, பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு பொலிஸார் சனசமூக நிலைய உறுப்பினர்களை அறிவுறுத்தியுள்ளனர். – என அவர்கள் தெரிவித்தனர்.

# 3 நாடுகளின் தூதுவர்கள் நேற்றுப் பதவியேற்றனர்









புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான மூன்று தூதுவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது பதவியேற்புப் பத்திரங்களைக் கையளித்தனர்.

சுவிற்சர்லாந்து, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இவ்வாறு புதிய தூதுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பதவியேற்புப் பத்திரங்களைச் சமர்ப்பித்த தூதுவர்களின் பெயர்கள் பவருமாறு:–

★ இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் கலாநிதி சிரி வோல்ப்.

★ இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் கலாநிதி அலிரெசா டெல் கொஷ் கார்மென் மோரேனோ.

★ இலங்கைக்கான ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் கலாநிதி அலிரெசா டெல்கொஷ்.



# கிங், நில்வளா கங்கைகளின் நீர்மட்டம் உயர்வு; தாழ்நிலப் பகுதி பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கிங், நில்வளா கங்கைகளின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது.

எனவே இந்த கங்கைகளைச் சுற்றி தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் இது தொடர்பில் அவதானத்துடன் இருக்கவேண்டும் என நீர்ப்பாசனத் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, நாட்டின் சில மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதற்கமைய, மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் 75 மில்லிமீட்டர் மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் உள்ளது என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதனிடையே, பதுளை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் இரத்தின புரி உள்ளிட்ட 10 மாட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு சீரடி சாய்பாபா ஆலயத்தில் சிறப்புற தங்க மகுடாபிஷேக விழா!









கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலயத்தில் தங்க மகுடாபிஷேக விழா நேற்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன், பாபாவுக்கு மகுடாபிஷேகம் செய்கின்றமையையும் , நிகழ்வில் பங்கேற்க சாயி நிலைய பொதுச்செயலாளர் எஸ்.தியாகராஜா, உபதலைவர் சிவா இராஜஜோதி ஆகியோர் அருகில் நிற்கின்றமையையும், பாபாவுக்கு ஆரத்தி காட்டப்படுவதையும் விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பி.குமார் இரட்ணம் மற்றும் ஆலய அறங்காவலர் ஜே.எம்.சுவாமிநாதன் ஆகியோர் வழிபாட்டில் ஈடுபட்டிருக்கின்றமையையும் படங்களில் காணலாம்.



# இன்றைய ராசி பலன்கள் - 25.10.2023




இன்று அதிர்ஷ்டம் காணப்படும் நாள். திருப்திகரமான பலன்கள் கிடைக்கும் சாதகமான நாள். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

பணியில் உங்கள் நேர்மை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். சரியான நேரத்தில் பணிகளை முடிப்பது சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் பணியில் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நம்பிக்கை ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இதனால் உங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எதிர்பாராத வரவுகளும் வெற்றியும் கிடைக்கும் நாள். புத்திசாலித்தனத்தை பயன் படுத்துவதன் மூலம் அதிகம் சாதிக்கலாம்.

பணியில் உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெரும். குறித்த நேரத்திற்கு முன்பே பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

நீங்கள் உங்கள் துணையிடம் சந்தோஷமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சீராக இருக்கும். காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு கண்டு மகிழ்வீர்கள்.

உங்களின் ஆற்றல் மற்றும் திடமான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கவனமாகக் கையாள வேண்டிய கடினமான சூழ்நிலைகள் காணப்படும். இசை கேட்பது மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது சில போராட்டங்களை சந்திப்பீர்கள். உங்கள் சக பணியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை நீங்கள் சந்திப்பீர்கள். இதனால் அவர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை அவ்வளவு திருப்திகரமாக காணப்படாது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று திருப்திகரமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை திட்டமிட்டு திறமையாக நடத்த வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணிகள் கடோயாக யாருக்கும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாத நிலை இருக்கும். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ளவும்.

மன நிலை மாற்றத்தால் பாதிப்பு ஏற்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவு காண இயலாது. உறவில் நல்லிணக்கம் காண அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று சிறிது பதட்டம் காணப்படும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் சாதகமான நாள். கடின உழைப்பு மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் லாபகரமான பலன்கள் கிடைக்கும். இது உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

நீங்கள் இன்று கடினமான பணிகளையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று பணம் சேர்ப்பதற்கானஅதிர்ஷ்ட நிலை உள்ளது. இதனால் உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள்.

இன்று உங்களின் மன உறுதி காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி உங்கள் முயற்சிகளில் வெற்றி காணலாம். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சியான நாள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதன் மூலம் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். பயணம் காணப்படுகின்றது. இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு வரும் பண வரவு வரப்பிரசாதமாக அமையும். எதிர்கால பாதுகாப்பிற்காக உபரிப் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நம்பிக்கையான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். சாதகமான பலன்கள் கிடைக்க கடினமான சூழ்நிலைகளை கவனமாக கையாள வேண்டும். இசை கேட்டல் மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை மீண்டும் சரிபார்த்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

தகவல் தொடர்பில் காணப்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் பாதிப்பு ஏற்படும். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். முடிவுகளை விரைந்து எடுப்பீர்கள். இதனால் பிரச்சினை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். உங்களை உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் சிறந்த பலனைக் காணலாம்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும். சக பணியாளர்களிடமிருந்து சில தொல்லைகளை எதிர் கொள்ள நேரும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு அனுசரணையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் காரணமாக பணம் கரையும்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.10.2023




உங்கள் வளர்ச்சிக்கு உதவும் முயற்சிகளை எடுக்க இன்றைய நாள் சாதகமாக உள்ளது. உங்கள் இலக்குகள் நிறைவேறும். திருப்தியும் நல்ல உணர்வும் உங்களிடம் இன்று காணப்படும்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு திருப்தி அளிக்கும். சாதித்தது போன்ற உணர்வு உங்களிடம் காணப்படும். எனவே நீங்கள் சிறப்பாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதற்கு உகந்த நாள். இதனால் இருவரிடையே நல்ல புரிந் துணர்வும் மகிழ்ச்சி யும் வளரும்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் பண வரவு ஏற்பட்டு பணம் சேர்க்க இயலும்.




இன்று சீரான பலன்கள் கிடைக்காது. சவால்களை சந்திக்க வேண்டிய சூழ் நிலை காணப்படும். நீங்கள் பொறுமை யுடனும் திறமையுடனும் இதனைக் கையாள வேண்டும். தான தருமங்கள் போன்ற தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் மன அமைதி பெறலாம்.

சக பணியாளர்களுடன் சில அசௌகரியங்களை உணர்வீர்கள். இம்மாதிரியான அற்ப விஷயங்களை தவிர்த்து உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டி யது இன்று அவசியம்.

இன்று உங்கள் துணையுடன் பேசாமல் அமைதியாக இருப்பது நல்லது.

இன்று கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். குடும்பத்தில் ஏற்படும் அதிகப்படி செலவுகளை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.




இன்று குழப்பங்களும் வருத்தமான மன நிலையும் காணப்படும். இன் றைய நாளை சமாளிக்க நீங்கள் அமைதி யுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படுவதால் நீங்கள் மும்மரமாக பணியில் ஈடுபட் டிருப்பீர்கள். சக பணியாளர்களின் எதிர்ப்பை சந்திப் பீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும். சிறப்பாக பணியாற்ற பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே சூடான விவா தங்கள் ஏற்படும். இதனை தவிர்க்க நீங்கள் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

நிதி வளர்ச்சியில் தடைகள் காணப்படும். கையிலி ருக்கும் பணத்தை சேமிக்க வேண்டியது அவசியம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. பொறுமையுடன் இருந் தால் பல நன்மைகளைக் காணலாம். வெறுமை இருப்பது போன்ற உணர்வு காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் இந்த சூழ்நிலையை சமாளித்து அமைதி பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும். இன்று நீங்கள் திட்டமிட்டு பணியாற்றுவது மிகவும் அவசியம் .

உங்கள் துணையுடன் சகஜமாக இருக்க வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தக்க வைக்க முடியும்.

நிதி விஷயங்களில் விரும்பும் பலன்கள் கிடைக்காது. உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர் கள். எனவே திட்டமிட்டு பணத்தை கையாள வேண்டும்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPAR JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# தென்னாபிரிக்கா இலகு வெற்றி

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில், தென்னாபிரிக்க அணி பங்களாதேஷ் அணியை இலகுவாக வென்றது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்கா – பங்களாதேஷ் அணிகள் மும்பையில் மோதின.

இந்த ஆட்டத்தின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி, முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர்களாக அனுபவ வீரர் குயிண்டன் டி கொக் மற்றும் ஹெண்ட்ரிக்ஸ் ஆகியோர் களமிறங்கினர்.

ஹெண்ட்ரிக்ஸ் 12 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். அதிரடி வீரர் வான் டெர் டசன் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து டி கொக் மற்றும் அணித்தலைவர் மார்க்ரம் இருவரும் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

இந்த ஜோடி 3ஆவது விக்கெட்டுக்காக 131 ஓட்டங்களைத் திரட்டிய நிலையில் பிரிந்தது. நிதானமாக ஆடிவந்த மார்க்ரம், அரைச்சதம் அடித்த நிலையில் 60 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

பின்னர் டி கொக்குடன் அதிரடி வீரர் கிளாசென் இணைந்தார். பொறுப்புடன் விளையாடிய டி கொக், சதம் அடித்து அசத்தினார். சதம் அடித்த பின்னர் டி கொக் அதிரடி காட்டினார். பந்துகளை நாலாபுறமும் பௌண்டரி, சிக்ஸர் எனப் பறக்க விட்டார்.

இதனால், அணியின் ஓட்ட எண்ணிக்கை கிடுகிடுவென உயர்ந்தது.

இந்நிலையில், டி கொக் இரட்டைச் சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 174 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் அதிரடி காட்டிய கிளாசென்,சதம்அடிக்கும்வாய்ப்பைக்கோட்டைவிட்டு 90 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் மில்லரின் அதிரடியுடன், 34 ஓட்டங்களைச் சேர்க்க, தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 382 ஓட்டங்களைக் குவித்தது.

பங்களாதேஷ் சார்பாக பந்துவீச்சில், ஹசன் முஹமது 2 விக்கெட்டுகளைக் கைப்பற்ற, மெஹதி ஹசன், சொரிபுல் இஸ்லாம், ஷகிப் அல் ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பின்னர் 383 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற பெரிய இலக்குடன் பங்களாதேஷ் அணி களமிறங்கியது.

அணியின் தொடக்க வீரர்களாக டான்சித் ஹசனும், லிட்டன் தாஸும் களமிறங்கினர்.

தென்னாபிரிக்க அணியின் அபார பந்துவீச்சால் ஆரம்பம் முதலே பங்களாதேஷ் வீரர்கள் தடுமாடினர்.

டான்சித் ஹசன் 12 ஓட்டங்களுடனும், லிட்டன் தாஸ் 20 ஓட்டங்களையும் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தனர். நஜ்முல் ஹசன் சாண்டோ, சந்தித்த முதல் பந்திலேயே பிடியெடுப்பு மூலம் வெளியேறினார்.

அனுபவ வீரர்களான முஷ்பிகூர் ரஹீம் 8 ஓட்டங்களையும், அணித்தலைவர் ஷகிப் அல் ஹசன் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

இதனால், பங்களாதேஷ் அணி 58 ஓட்டங்களுக்குள் 5 முக்கிய விக்கெட்டுகளை இழந்து தவித்தது.

ஒருமுனையில் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுமுனையில் அனுபவ வீரர் மஹ்முதுல்லா தனி ஆளாகப் போராடினார்.

தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர் சதம் அடித்து அசத்தினார்.

ஆனால் அவரால் அணியை வெற்றி இலக்குக்கு அருகில் கூட கொண்டு செல்லமுடியவில்லை. 111 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் அவர் ஆட்டமிழந்தார்.

இறுதியில் பங்களாதேஷ் அணி 46.4 ஓவர்களில் 233 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன்மூலம் தென்னாபிரிக்க அணி 149 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்க அணி சார்பாக பந்துவீச்சில், கோட்ஸி 3 விக்கெட்டுகளையும், ரபாடா, யான்சென், வில்லியம்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவின் டி கொக் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 8 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் அவுஸ்திரேலியா – நெதர்லாந்து அணிகள் மோதவுள்ளன.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 5 | 5 | 0 | 0 | 0 | 10 | 1.353 |
| 02 | தென்னாபிரிக்கா | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | 2.370 |
| 03 | நியூஸிலாந்து | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | 1.481 |
| 04 | அவுஸ்திரேலியா | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | -0.193 |
| 05 | பாகிஸ்தான் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.400 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.969 |
| 07 | நெதர்லாந்து | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.790 |
| 08 | இலங்கை | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.048 |
| 09 | இங்கிலாந்து | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.248 |
| 10 | பங்களாதேஷ் | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -1.253 |

குறிப்பு: போ–போட்டி, வெ–வெற்றி, தோ–தோல்வி, மு.அ.–முடிவு அற்றது, பு–புள்ளி, ஓ.ச.–ஓட்ட சராசரி